20.4.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**காற்றாலை மின் உற்பத்தியைக் கணிக்க புதிய வசதி அறிமுகம்**

தமிழகத்தில் காற்றாலை மின் உற்பத்தியைக் கணிப்பதற்கான புதிய வசதி, சோதனை அடிப்படையில் இந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட உள்ளது.

காற்றாலை மின் உற்பத்தியைக் கணிப்பதற்கான அமைப்புகளை நிறுவவும், குறிப்பிட்ட நேரத்தில் காற்றாலை மின் உற்பத்தி எவ்வளவு உள்ளது என்பதை அறிந்துகொள்வதற்காக துணை மின் நிலையங்களில் பிரத்யேக மீட்டர்களைப் பொருத்தவும், தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த அமைப்புகள் ரூ. 5 கோடி செலவில் நிறுவப்பட உள்ளன.

குறைந்தபட்சம் 15 நிமிஷங்கள் முதல் அதிகபட்சம் 6 நாள்கள் வரை முன்கூட்டியே காற்றாலை மின் உற்பத்தியைக் கணிக்கும் வசதிகள் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் 7,373 மெகாவாட் அளவுக்கு காற்றாலை மின் உற்பத்தி நிறுவுதிறன் உள்ளது. ஆனால், இதில் அதிகபட்சமாக இதுவரை 4,318 மெகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

காற்றின் வேகத்துக்கு ஏற்ப காற்றாலை மின் உற்பத்தி திடீரென அதிகரிக்கவும், குறையவும் செய்யும். ஆனால், அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியை திடீரென அதிகரிக்கவோ, குறைக்கவோ முடியாது.

எனவே, காற்றாலைகளில் அதிக அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டாலும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னையிலுள்ள தேசிய காற்றாலை மின் நிறுவனம் காற்றாலை மின் உற்பத்தியைக் கணிக்கும் அமைப்புகளை நிறுவ முடிவு செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் காற்றாலை அமைந்துள்ள கயத்தாறு துணை மின் நிலையத்துக்கு உள்பட்ட அனைத்து காற்றாலைகளிலும் இந்தக் கணிக்கும் அமைப்பு பொருத்தப்படுகிறது.

இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் தமிழகத்தில் உள்ள அனைத்துக் காற்றாலைகளிலும் இந்த அமைப்பு பொருத்தப்படும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

காற்றாலை மின் உற்பத்தி தொடர்பாக 70 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை துல்லியமாகவும், குறைந்தபட்சம் 36 மணி நேரங்களுக்கு முன்னதாகவும் கணிக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகத்துக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

காற்றாலை மின் உற்பத்தியை 24 மணி நேரமும் கண்காணிப்பதற்காக காற்றாலைகளிலிருந்து மின்சாரத்தைப் பெறும் 134 துணை மின் நிலையங்களிலும் பிரத்யேக மீட்டர்கள் பொருத்தப்பட உள்ளன.

இதற்கான நவீன சர்வரும் சென்னையில் உள்ள மாநில கட்டுப்பாட்டு மையத்தில் அமைக்கப்படும்.அதன்மூலம் குறிப்பிட்ட நேரத்துக்கான காற்றாலை மின் உற்பத்தி குறித்து கணிப்பதோடு காற்றாலை மின் உற்பத்தியையும் அறிந்துகொள்ளலாம்.அடுத்து எவ்வளவு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்பதை அறிந்திருப்பதால், அதிக அளவிலான மின்சாரத்தை தமிழகம் முழுவதும் வெளியேற்றிப் பயன்படுத்தலாம் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழகம், புதுவையில் சில இடங்களில் மழை வாய்ப்பு

தமிழகம், புதுவையின் சில இடங்களில் திங்கள்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் திங்கள்கிழமையும் ஒரு சில இடங்களில் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், கோவை, ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேர நிலவரப்படி, பெரியகுளத்தில் 50 மி.மீ, வால்பாறையில் 40 மி.மீ. மழை பதிவானது. குந்தா பாலம் (30 மி.மீ.), சின்னக் கல்லாறு, ஆண்டிப்பட்டி, சூளகிரி (20 மி.மீ.), ராஜபாளையம் (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**நீலகிரி தேயிலை கொள்முதலில் பாகிஸ்தான் ஆர்வம்**

நீலகிரி தேயிலையை கொள்முதல் செய்வதில் மீண்டும் பாகிஸ்தான் வர்த்தகர்கள் ஆர்வம் காட்டி வருவதாக தேயிலை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.நீலகிரி மாவட்டத்தின் முக்கிய பணப்பயிரில் ஒன்றான தேயிலை சராசரியாக ஆண்டுக்கு 15 லட்சம் கிலோ விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதில், தேயிலைகள் 85 சதவீதம் வரை ஏலம் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பாக்கெட் தேயிலை விற்பனை செய்பவர்கள் அதிக கொள்முதல் செய்தாலும், கடந்த ஆறுமாத காலத்திற்குப் பின் மீண்டும் பாகிஸ்தானுக்காக நீலகிரி தேயிலைகளை கொள்முதல் செய்ய இந்திய ஏற்றுமதியாளர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதற்கு, முக்கிய காரணம் தற்போது தேயிலைக்கு தேவையான அளவு மழை பெய்துள்ளதால் உற்பத்தி அதிகரித்து காணப்படுகிறது. இதனால், சராசரியாக கிலோ ரூ. 76 முதல் 80 வரை விற்கப்படுகிறது.

இந்த விலை இன்னும் சில ஏலத்தில் கிலோ ரூ. 72 ஆக குறையும்போது மேலும் ஏற்றுமதி சூடுபிடிக்கும் என்று வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு ஏற்ற காலநிலை நிலவுவதால் உற்பத்தி அதிகரித்து காணப்படுகிறது. தற்போது சமவெளிப் பகுதியில் வெயிலின் தாக்கம் அதிகம் இருப்பதால் தேநீருக்குப் பதிலாக குளிர்பானங்களின் விற்பனை அதிகரிக்கும் என்பதால் விலையும் கனிசமான அளவு குறையும் என்று கூறப்படுகிறது. இந்த விலை குறைவின் காரணமாக, மீண்டும் தேயிலை ஏற்றுமதி அதிகரிக்கும் வாய்ப்பிருப்பதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

**தென்னைக்கும் பயிர்க்காப்பீடு செய்யலாம்**

சிவகங்கை மாவட்டத்தில் தென்னை விவசாயம் செய்பவர்களும் பயிர்க் காப்பீடு செய்யலாம் என வேளாண் இணை இயக்குநர் குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:சிவகங்கை மாவட்டத்தில் 8,600 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோடைகாலத்தில் ஏற்படும் வறட்சியினால் தென்னை மரம் பாதிப்பு அடைய வாய்ப்புள்ளதால், விவசாயிகள் காப்பீடு செய்து பயன்பெறலாம். ஒரு ஆண்டு முதல் 15 ஆண்டுகள் வரை உள்ள ஒரு மரத்திற்கு மொத்த

பிரிமியம் தொகை ரூ.9 இல் அரசு மானியம் போக ரூ.2.25 செலுத்தினால் போதும். 16 ஆண்டுகள் முதல் 60 ஆண்டுகள் வரை உள்ள ஒரு மரத்திற்கு மொத்த பிரிமியத் தொகை ரூ.14 இல் அரசு மானியம் போக ரூ.3.50 செலுத்தி காப்பீடு செய்து பயன்பெறலாம்.

காப்பீடு செய்த ஒரு ஆண்டு காலத்திற்குள் பாதிப்பு ஏற்பட்டால் பயிர் இழப்பீட்டு தொகை பெறலாம். ஒரு ஏக்கருக்கு 70 மரங்கள் வரை காப்பீடு செய்யலாம். காப்பீடு செய்வதற்கு கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல் சான்று பெற்று சம்மந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு காப்பீடு செய்யலாம், என தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை வழங்கல்**

திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் சிவசுப்பிரமணியன் தலைமை வகித்தார். திருப்பத்தூர் ஒன்றியக் குழுத் தலைவர் கஸ்தூரி நாகராஜன், துணைத் தலைவர் பத்மநாதன், ஒன்றிய கவுன்சிலர் வள்ளி சிதம்பரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் 227 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் வடமாவளி ஊராட்சி மன்றத் தலைவர் முருகானந்தம், பிராமணம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் மணி, கடன் சங்க நிர்வாகிகள் தமிழரசன், கதிரேசன், கருப்பையா, சுமதிகணேசன், பாண்டியன், மோகன், நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கக் கூட்டம்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டக் குழுக் கூட்டம், தலைவர் பி.கே.முருகேசன் தலைமையில் சனிக்கிழமை சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.மாவட்டக்குழுநிர்வாகிகள்ஏ.ரெங்கராஜ்,கே.ராமநாதன்,ஏ. சிங்கமுத்து,எஸ்.முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலாளர் எம். முத்துராமு தீர்மானங்களை முன்மொழிந்து பேசினார். இக்கூட்டத்தில் 100 நாள் வேலைத் திட்டத்துக்கு ஆதார் அட்டை எண் அவசியம் என வலியுறுத்தக்கூடாது என்றும், பயிர்க்காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் விரைவில்

இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கால்நடை பல்கலை. சார்பில் இலவச பயிற்சி முகாம்**

ராஜபாளையம் தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சிமையத்தில் ஏப். 21 ஆம் தேதி விஞ்ஞான முறையில் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாமும், ஏப். 22 ஆம் தேதி கறவை மாடு வளர்ப்பு பயிற்சி முகாமும் நடைபெற உள்ளது.

இந்த பயிற்சி முகாமில் பங்கேற்க விரும்பும் கால்நடை வளர்போர், இளைஞர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுவினர் வரும் ஏப் 20 ம் தேதிக்குள் 04563 220244 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்களைப் பற்றிய விபரங்களைக் கூறி முன்பதிவு செய்து கொள்ளவேண்டும். முதலில் வரும் 25 பேருக்கு மட்டும் பயிற்சியளிக்கப்படும் என ராஜபாளையம் தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் கதிர்வேல் அறிவித்துள்ளார்.

**ஈடன் நாற்றுப் பண்ணைக்கு வேளாண் மாணவர்கள் வருகை**

மேட்டுப்பாளையம் அருகே வெள்ளிபாளையம் சாலையில் உள்ள ஈடன் நாற்றுப் பண்ணையை கோவை வேளாண் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி மாணவ, மாணவிகள் சனிக்கிழமை பார்வையிட்டனர். தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக மலரியல் துறைப் பேராசிரியர் ராஜதுரை தலைமையில் இந்த மாணவ,மாணவிகள் நாற்றுப் பண்ணைக்கு வருகை தந்தனர். இங்கு, இலைகள் மூலம் நாற்று உற்பத்தி, குளோன் கட்டிங் இயந்திரம், நாற்று உற்பத்தி பணிக் கூடம், நோனி பழப் பண்ணை, நாற்று உற்பத்தி செய்முறைகள், அவற்றைப் பராமரித்தல், சந்தைப்படுத்தல் ஆகியவை குறித்து மாணவ, மாணவிகளுக்கு நாற்றுப் பண்ணை நிறுவனர் ராஜரத்தினம் விளக்கம் அளித்தார்.

**வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.1.18 கோடிக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1 கோடியே 18 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது. பெருந்துறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி

விவசாயிகள் 2,599 மூட்டைகளில், 1 லட்சத்து 27 ஆயிரம் கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 97.20-க்கும், அதிகபட்சமாக ரூ. 99.25-க்கும் ஏலம் போனது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 56.10-க்கும், அதிகபட்சமாக ரூ. 95.30-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 1 கோடியே 18 லட்சத்துக்கு விற்பனை நடைபெற்றது.

**விளைச்சல் குறைந்ததால் பலாப் பழங்கள் விலை உயர்வு**

கேரளத்தில் விளைச்சல் குறைந்ததால் பலாப் பழங்களின் விலை உயர்ந்துள்ளது.

முக்கனிகளில் தேன் சுவை கொண்ட கனியாக போற்றப்படுவது பலாப் பழம். பழங்களின் அரசன் என்ற பெருமை கொண்ட இப்பழம் மரத்தில் விளையும் பழங்களிலேயே பெரிய பழமாகும். சில இடங்களில் மட்டுமே இது முறையான விவசாய முறைகளின்படி தோட்டங்களில் வளர்க்கப்படுகிறது.

பெரும்பாலும் மற்ற பழத்தோட்டங்களில் துணைப் பயிராகவோ அல்லது வீட்டுத் தோட்டங்களிலோ இம்மரம் வளர்க்கப்படுகிறது. பல்வேறு சத்துக்கள் கொண்ட பலாப் பழத்தின் சுவை மரத்துக்கு மரம் வேறுபாடு உடையதாக இருக்கும். சில பலாப் பழச் சுளைகள் தேன் போன்று இனிப்பாகவும், சில பழங்கள் இனிப்பு குறைந்தவையாகவும் இருக்கும்.

பொதுவாக பலா சீசன் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை இருக்கும். இப்போது கேரளத்தில் இருந்து அதிக அளவில் ஈரோட்டுக்கு பலாப் பழம் வரத் தொடங்கியுள்ளது. இவை பழத்துக்கு தகுந்தாற்போல் குறைந்தபட்சம் ரூ. 50 முதல் ரூ. 450 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. பொதுமக்கள் மட்டுமின்றி சில்லறை வியாபாரிகளும், தள்ளுவண்டி வியாபாரிகளும் ஏராளமானோர் பலாப் பழங்களை வாங்கிச் சென்று சாலையோரங்களிலும், பொதுமக்கள் கூடும் இடங்களிலும் விற்பனை செய்து வருகின்றனர். இதுகுறித்து, ஈரோடு நேதாஜி சந்தை கனி வணிகர்கள் சங்கத் தலைவர் ஆர்.கே.சண்முகவேல் கூறியது:

முதலில் பண்ருட்டியில் இருந்து பலாப் பழங்கள் வந்தன. சில நாள்களிலேயே அங்கிருந்து வரும் பழங்களின் வரத்து குறைந்துவிட்டது. இப்போது கேரளத்தில் இருந்து தினமும் 15 டன் பழங்கள் வருகின்றன.

இவை கிலோவுக்கு ரூ. 12 முதல் ரூ. 15 வரை விற்பனை செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டும் இதே சீசனில் 50 டன் பழங்கள் வந்தன. அப்போது கிலோ ரூ. 7 மற்றும் ரூ. 8-க்கும் விற்பனையானது. இந்த ஆண்டு விளைச்சல் குறைந்து, வரத்தும் குறைந்துவிட்டதால் விலை உயர்ந்துள்ளது என்றார்.

**மாம்பழ விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருள்கள்**

மாம்பழ விவசாயிகளுக்கு மானிய விலையில் இடு பொருள்கள் வழங்க கர்நாடக மாநில மாம்பழ வளர்ச்சி மற்றும் சந்தைப்படுத்தல் கழகம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து கர்நாடக மாநில மாம்பழ வளர்ச்சி மற்றும் சந்தைப்படுத்தல் கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கர்நாடகத்தில் விளைவிக்கப்படும் மாம்பழங்கள் சத்துள்ளதாகவும், கிருமியில்லாமலும் இருப்பதற்காக மாம்பழங்களுக்கு சத்து வழங்கும் மேங்கோ ஸ்பெஷல் ஊட்டச்சத்து மற்றும் கிருமிகளை சாகடிக்கும் சீலர் கம் ஹீலர் என்ற கிருமிநாசினியை 50 சத மானிய விலையில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாவட்ட மையங்களில் இவற்றை கொள்முதல் செய்யலாம். பெங்களூரில் ஹேமந்த்குமார்-9880755074, நாகேந்திரபாபு-8792123827 ஆகியோரிடம் கொள்முதல் செய்து கொள்ளலாம்.

மேங்கோ ஸ்பெஷல் கிலோவுக்கு ரூ.118, சீலர் கம் ஹீலர் கிலோவுக்கு ரூ.110 விலையில் பெற்றுக் கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நேரடி நெல் கொள்முதல் நிலைய கால வரம்பை நீட்டிக்க வலியுறுத்தல்**

அரியலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில் தாமதமாக நடைபெற்று வரும் நெல் அறுவடையால் விவசாயிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் வகையில் நேரடி நெல் கொள்முதல் நிலைய கால வரம்பை நீட்டிக்க விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் திருமானூர், தா.பழூர் ஆகிய 2 ஒன்றியங்கள் டெல்டா பகுதிகளாக உள்ளது.

திருமானூர் ஒன்றியத்தில் சுமார் 22 ஆயிரம் ஏக்கரும், தா.பழூர் ஒன்றியத்தில் சுமார் 18 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் 13 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளிட்ட 18 இடங்களில் நெல் கொள்முதல் செய்யப்படுவது வழக்கம். இந்நிலையில் நடப்பாண்டில் மார்ச் மாதத்துடன் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தாற்காலிகமாக மூடப்படுவதாக அரசு அறிவிப்பு செய்திருந்தது.25 சதவீத சாகுபடி பரப்பில் அறுவடை முடியாத சூழ்நிலையில் நெல் கொள்முதல் நிலையங்களை மூடக்கூடாது என்று விவசாயிகள் வலியுறுத்தி இருந்தனர். ஆனால், ஏப்.5 ஆம் தேதியுடன், அனைத்து நெல் கொள்முதல் நிலையங்களும் மூடப்பட்டு விட்டன. இதனால், பல விவசாயிகள் தனியார் இடைத்தரகர்களை நம்பி நஷ்டமடையும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து, சேனாபதி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஆறுமுகம் கூறும் போது, தனியார் வியாபாரிகள் ஒரு மூட்டை நெல் 60 கிலோ என்பதற்கு பதிலாக 62 அல்லது 65 கிலோ நெல்லை அளக்கின்றனர். மேலும் பணத்தையும் உடனே தருவதில்லை. இதனால்,பெருமளவு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் கால வரம்பை மேலும் ஒரு மாதத்துக்கு நீட்டிக்க வேண்டும் என்றார். கீழக்காவட்டங்குறிச்சி கிருஷ்ணமூர்த்தி என்ற விவசாயி கூறும்போது, தஞ்சாவூர் மாவட்டத்தில் இருப்பது போல அரியலூர் மாவட்ட டெல்டா பகுதிகளான திருமானூர், மற்றும் தா.பழூர் பகுதிகளில் தலா 2 நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்தால் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றார். நிரந்தர நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா? என்பதே இப்பகுதி விவசாயிகளின் எதிர்பார்ப்பு .

**விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்,இடுபொருட்கள் வழங்கல்**

மன்னார்குடியில் ஞாயிற்றுக்கிழமை விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் மற்றும் வேளாண் இடுபொருள்களை தமிழக உணவு மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் ஆர். காமராஜ் வழங்கினார்.நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியது: காலம் தவறிக் கொடுக்கும் எதுவும் விவசாயிகளுக்கு உதவாது என்பதை அறிந்து, தமிழக அரசு

விவசாயிகளுக்கு வேளாண் பொருள்களை வழங்கி வருகிறது. வறட்சி, வெப்0ளத்தால் பாதிப்பு வராமல் விவசாயிகளை காத்தும், காவிரி நடுவர்மன்ற தீர்ப்பை பெற்றுத் தந்து, முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திய அரசு தமிழக அரசு விவசாயிகளின் வாழ்வாதாரம் பேணி காப்பது, அவர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. மேலும் வறட்சி காலத்தில் குறுவைதொகுப்பு, சம்பா தொகுப்பு மானியம், மற்றும் முழு மானியத்திலும் வேளாண் இடுபொருள்கள் வழங்குகிறது என்றார் காமராஜ். மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன், வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**அறுவடைக்கு தயாரான பச்சை பயறு பயிர்**

பொன்னேரி:பச்சை பயறு பயிரிடப்பட்ட விளை நிலங்களில், அவை வளர்ந்து அறுவடைக்கு தயாராகி உள்ளது.மீஞ்சூர் ஒன்றியம், தேவராஞ்சேரி, மடிமைகண்டிகை, ஏருசிவன் உள்ளிட்ட
கிராமங்களில் சம்பா பருவத்திற்கு பின், பச்சை பயறு பயிரிடப்பட்டது. ஒரு சிலர் தனி பயிராகவும், ஒரு சிலர் ஊடு பயிராகவும் பயிரிட்டனர்.
கடந்த, ஜனவரி மாத இறுதியில், விதைக்கப்பட்ட பச்சை பயறு பயிர்கள், நன்கு வளர்ந்து, தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. அக்கரம்பேடு, உத்தண்டிகண்டிகை, வேண்பாக்கம் உள்ளிட்ட இடங்களில், அறுவடை பணிகள் முடிந்து உள்ளன.அறுவடை பணிகள் முடிந்த இடங்களில், ஏக்கருக்கு இரண்டு மூட்டை முதல், நான்கு மூட்டை வரை, பச்சை பயறு மகசூல் கிடைத்து உள்ளது. ஒரு மூட்டை (100 கிலோ), 6,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. விலை, ஓரளவிற்கு எதிர்பார்த்தபடி அமைந்தாலும், மகசூல் குறைவாக உள்ளது என, விவசாயிகள் கூறுகின்றனர்.

## பருத்தி ஏலம் ஒத்திவைப்பு

ஆத்தூர் : ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், மறு தேதி குறிப்பிடாமல், பருத்தி ஏலம், ஒத்திவைக்கப்பட்டது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வார நாட்களில் மஞ்சள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துகளின் ஏலம் நடக்கிறது. இந்த, ஏலத்தில் வெளி மாவட்டம் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த விவசாயி, விளைவித்த மஞ்சள் மற்றும் பருத்தியை கொண்டு, வந்து விற்பனை செய்கின்றனர்.இந்நிலையில், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், விலைக்கு வாங்கிய பருத்தி மூட்டையை, வியாபாரிகள் எடுத்து செல்லாததால், தேக்கம் அடைந்துள்ளது. அதன் காரணமாக, திங்கள் கிழமை (இன்று), நடக்கும் பருத்தி ஏலத்தை, கூட்டுறவு சங்க நிர்வாகத்தினர், மறு தேதி குறிப்பிடாமல், ஒத்திவைத்துள்ளனர்.

## சர்ச்சைக்குரிய "வாகை மரம்' துளிர்த்து விட்டதால் அதிர்ச்சி

மேட்டூர் : மேட்டூர் கால்வாய் கரையோரம், வேருடன் சாய்ந்த சர்ச்சைக்குரிய வாகை மரம் ஏலம் விட்டு, வெட்டுவதற்கு தாமதமானதால், மீண்டும் துளிர் விட்டு வளர துவங்கியுள்ளதால், அப்பகுதி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

மேட்டூர் அடுத்த நவப்பட்டியில், கிழக்கு, மேற்கு கால்வாய் கரையோரம் வளர்ந்திருந்த பழமையான வாகை மரம் ஒன்று, வேரோடு சாய்ந்தது. இந்த மரத்தை விற்பனை செய்வதற்காக, கடந்த நவம்பர், 6ம் தேதி, மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாய் உதவி பொறியாளர் அலுவலகத்தில், பொது ஏலம் நடந்தது. தலா, 5,000 ரூபாய் டிபாஸிட் செலுத்தியவர்கள் மட்டுமே, ஏலத்தில் பங்கேற்க முடியும்.ஆனால், யாருமே எதிர்பார்க்காத வகையில், வாகை மரத்தை ஏலம் எடுக்க, 292 பேர், 14.60 லட்சம் ரூபாய் டிபாஸிட் செலுத்தி ஏலத்தில் பங்கேற்றனர். இதனால், மரம் பல லட்சம் ரூபாய்க்கு, ஏலம் போகும் என அதிகாரிகள் எதிர்பார்த்தனர்.

ஆனால், குறைந்தபட்ச ஏலத்தொகையாக, 35,000 ரூபாய் நிர்ணயித்த போதிலும், மரம், 45,500 ரூபாய்க்கு மட்டுமே ஏலம் போனது. ஆனால்,

ஏலம் எடுத்தவர், சிண்டிகேட் அமைத்து, அதே மரத்தை வெளியில் மறைமுகமாக, கூடுதல் தொகைக்கு ஏலம் விட்டதாக தெரிகிறது. இதனால், ஏலத்தை ரத்து செய்து, மறுஏலம் விட வேண்டும் என ஒரு தரப்பினர் பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் மனு கொடுத்தனர்.அதை தொடர்ந்து விசாரணை நடத்திய, பொதுப்பணித்துறை அதிகாரிகள், ஏலத்தை ரத்து செய்தனர். மேட்டூரில் ஏலம் நடத்தினால், மீண்டும் சர்ச்சை ஏற்படும் என்பதால், வாகை மரம் ஏலம், குமாரபாளையம் கால்வாய் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்துக்கு மாற்றப்பட்டது. இறுதியாக கடந்த மாதம், குமாரபாளையத்தில் மரம் ஏலத்துக்கு விடப்பட்டது.

"சிண்டிகேட்' சர்ச்சையில் சிக்கியதால், ஏலம் விட நான்கு மாதம் தாமதம் ஆனதாலும், சமீபத்தில் ஏலம் விட்ட போதிலும், மரத்தை அகற்ற தாமதம் ஆனதால், வாகை மரம் மீண்டும் துளிர் விட்டு வளர துவங்கி விட்டது. ஏலம் தாமதம் ஆன நிலையில், சாய்ந்து, காய்ந்து கிடந்த மரம் மீண்டும் துளிர் விட்டு வளர்ந்து பச்சை பசேல் என காட்சியளிப்பது, நவப்பட்டி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

**தக்காளி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்து வருவதை அடுத்து, தக்காளி விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தமிழக அளவில், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் தக்காளி உற்பத்தியில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம், அரூர் உட்பட, மாவட்டம் முழுவதும், 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல், சாகுபடி செய்யப்படுகிறது.பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் தக்காளி பாலக்கோடு தக்காளி சந்தையில் இருந்து, கோவை, சென்னை, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அதிகளவில் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதற்காக, இப்பகுதியை சேர்ந்த வியாபாரிகள் தினந்தோறும், பாலக்கோடு தக்காளி சந்தைக்கு வந்து, தங்களுக்கு தேவையான அளவு தக்காளிகளை வாங்கி, வாகனங்களில் எடுத்து செல்கின்றனர். குறிப்பாக, கடந்த, 50 நாட்களுக்கு

மேலாக, பாலக்கோடு தக்காளி சந்தைக்கு தக்காளி வரத்து அதிகளவில் இருந்தது. இதனால், தக்காளி விலை கடுமையாக சரிந்து வந்தது.

இதனால், விவசாயிகள் கவலை அடைந்து வந்தனர். பல விவசாயிகள், தக்காளி பயிரை அழித்து, மாற்று பயிர் சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், கோடை வெயில் மற்றும் கோடை மழையால், தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு, சந்தைக்கு தக்காளி வரத்து படிப்படியாக குறைய தொடங்கியது.சந்தைக்கு தக்காளி வரத்து குறைவால், கடந்த சில தினங்களாக, தக்காளி விலை அதிகரித்து வந்தது இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.பாலக்கோடு பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:கடந்த சில மாதங்களுக்கு முன், ஒரு கிலோ தக்காளி, 30 ரூபாய் வரை விற்பனையானது. இதனால், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் உட்பட, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், தக்காளி சாகுபடிக்கு மாறினர். கடந்த, இரு மாதங்களாக, சந்தைக்கு தக்காளி வரத்து அதிகரித்ததால், ஒரு கிலோ தக்காளி, மூன்று ரூபாய் வரை விற்பனை ஆனாது. இதனால், விரக்தி அடைந்த பல விவசாயிகள், தக்காளி சாகுபடியில் இருந்து வேறு பயிர்களை சாகுபடி செய்ய துவங்கினர். மேலும், கோடை வெயில் மற்றும் கோடை மழையின் காரணமாக தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால், சந்தைக்கு வரும் தக்காளி வரத்து குறைய தொடங்கியுள்ளதால், கடந்த சில தினங்களாக தக்காளி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. பாலக்கோடு தக்காளி சந்தையில், ஒரு கிலோ தக்காளி, 9 ரூபாய் முதல், 11 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இது மேலும், அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளதால், தக்காளி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றார்.

## ரூ.18 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை

ஈரோடு : பெருந்துறை வாரசந்தைக்கு, 1.50 லட்சம் தேங்காய் விற்பனைக்கு வந்தது.

கடந்த வாரத்தை விட இது, 50 ஆயிரம் காய் கூடுதலாகும். திங்களூர், நல்லாம்பட்டி, பெத்தாம்பாளையம், காஞ்சிகோவில், வெள்ளோடு, பெருந்துறை, சென்னிமலை, அரச்சலூர், ஈங்கூர் பகுதிகளில் இருந்து

விவசாயிகள், தேங்காயை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.முதல் தரம், 11 முதல், 12 ரூபாய் வரையும், இரண்டாம் தரம், ஒன்பது முதல், 10.50 ரூபாய் வரையிலும், மூன்றாம் தரம், எட்டு முதல், ஒன்பது வரையிலான விலையில் விற்கப்பட்டது. மொத்தம், 18 லட்சம் ரூபாய்க்கு தேங்காய் ஏல விற்பனை நடந்தது. கோடை காலம் என்பதால் தேங்காய்க்கு அதிக விலை கிடைக்கிறது. இதனால் தென்னை விவசாயிகள் சற்றே நிம்மதி அடைந்துள்ளனர்.

**கோடை மழையால் உற்பத்தி அதிகம் குண்டு மல்லி விலை கிலோ ரூ.40**

திருச்சி: கோடை மழை பெய்வதால், குண்டு மல்லி உற்பத்தி மற்றும் வரத்து அதிகாரித்து, விலை சரிந்துள்ளது. நேற்று காலை, காந்தி மார்க்கெட்டில், ஒரு கிலோ குண்டு மல்லி, 40 ரூபாய்க்கு விற்கப்பட்டதால், பெண்கள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

திருச்சி நகரில் காந்தி மார்க்கெட், ஸ்ரீரங்கம் பூ மார்க்கொட் ஆகிய இடங்களில், 40க்கும் மேற்பட்ட பூ கமிஷன் மொத்த வியாபாரிகள் உள்ளனர். தவிர, சந்திரம், மத்திய பஸ் ஸ்டாண்ட், ஜங்சன், கோவில்கள் மற்றும் பஸ் ஸ்டாப்களில் பூக்கள் சில்லை விற்பனை செய்கின்றனர். மாவட்டத்தில் கோப்பு, எட்டரை, குழுமணி, மணப்பாறை சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் பூக்கள் உற்பத்தி செய்கின்றனர். நாள்தோறும் காந்தி மார்க்கெட், ஸ்ரீரங்கம் பூமார்க்கெட்டுக்கு, இரண்டு முதல், மூன்று டன் மல்லிகை பூக்கள் விற்பனைக்கு வருகிறது. சீஸன் துவங்கி விட்டால், எட்டு முதல், பண்டிகை நாட்களில், 10 டன் பூக்கள் வரை விற்பனைக்கு வருகிறது. திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில், சமயபுரம் மாரியம்மன் கோவில், உறையூர் வெக்காளியம்மன் கோவில் மற்றும் சிறிய கோவில்களில் திருவிழா நடந்து வருகிறது. தவிர, சித்திரை கொண்டாட்டங்களால், பழங்களுடன், பூக்களின் விலை கடுமையாக உயர்ந்தது. குண்டு மல்லி, கடந்தவாரம் கிலோ, 600 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

சமீபத்தில் பெய்த கோடை மழை காரணமாக, குண்டு மல்லி வரத்து அதிகரித்து, கிலோ, 40 ரூபாயாக சரிந்துள்ளது.இதுகுறித்து காந்தி மார்க்கெட் பூ கமிஷன் வியாபாரி அக்கிம் கூறியதாவது: கோடையில்

குண்டுமல்லி சீஸன் துவங்கியுள்ளது. மழை பெய்ததால், பூக்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்த வாரம் வரை, மூன்று டன் பூக்கள் விற்பனைக்கு வந்தது. காலையில் கிலோ, 200 ரூபாயில் துவங்கி, மதியம், 90 ரூபாய் வரை விற்கப்பட்டது. சித்திரை முதல் நாளன்று வரத்து அதிகம் இருந்த போதிலும், கிலோ, 600 ரூபாய் வரை விற்கப்பட்டது. தற்போது, விலை கடுமையாக சரிந்து, மார்க்கெட்டில் காலை நேரத்தில், 60 ரூபாயில் துவங்கி, மதியம், 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வைகாசியில் முகூர்த்த சீஸன் துவங்கியதும் விலை மீண்டும் உயர்ந்து விடும். இவ்வாறு அவர் கூறினார்.

**கோடை மழையால் கால்நடை வளர்ப்பவர்கள் நிம்மதி! தீவன தட்டுப்பாடு முழுமையாக நீங்கியது**

ஆண்டிபட்டி : தேனி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த கோடை மழையால் கால்நடைகளுக்கு தேவையான புற்கள் வளர்ச்சி அதிகளவில் காணப்படும் என்பதால் தீவன தட்டுப்பாடு நீங்கியுள்ளது. இதனால் கால்நடை வளர்ப்போர் நிம்மதியடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மானாவாரி மற்றும் இறவைப்பாசனம் நடந்து வருகிறது. இப்பகுதி விவசாயிகள் விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பை உப தொழிலாக கொண்டுள்ளனர். கால்நடை வளர்ப்பில் பால் மாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவாய் ஈட்டி வருகின்றனர். மழைக்காலங்களில் விளையும் தானிய, பயறு வகை பயிர்களை அறுவடைக்கு பிறகு விவசாயிகள் கால்நடை தீவனத்திற்கு பயன்படுத்திக்கொள்வர். சில விவசாயிகள் வெளியூர்களில் இருந்து வைக்கோல், சோள தட்டைகளை விலைக்கு வாங்கி வந்து இருப்பில் வைத்து கோடைகாலத்தில் தீவனத்திற்கு பயன்படுத்துவர்.

கடந்த சில ஆண்டுகளாக தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை கை கொடுக்காததால் மானாவாரி, இறவை பாசனங்களின் பரப்பு குறைந்து போனது. இதனால் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. செயற்கை தீவனங்கள் விலை பல மடங்கு உயர்ந்து விட்டது. விளைச்சல் குறைந்ததால் இயற்கை தீவனங்களை போதுமான அளவில் இருப்பு வைக்க முடியவில்லை. இதனால் கால்நடை

வளர்த்து வருபவர்கள் தீவனத்திற்காக திண்டாடும் நிலை ஏற்பட்டது. கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியில் விவசாயிகள் பலர் பால்மாடுகள், வளர்ப்பு மாடுகளை பராமரிக்க முடியாமல் அவற்றை குறைந்த விலைக்கு விற்று வந்தனர்.

கடந்த சில நாட்களாக தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை மழை பரவலாக பெய்து வருகிறது. காய்ந்து கிடந்த நிலங்களில் புற்கள் முளைத்துள்ளன. நீர் வரத்து ஓடைகள், கண்மாய்கள், சிறு குளங்களுக்கான நீர் வரத்து இல்லை. இருப்பினும் ஆங்காங்கே தேங்கி உள்ள நீர் கால்நடைகளின் குடிநீர் தேவையை தற்காலிகமாக பூர்த்தி செய்கிறது. தற்போதுள்ள சூழலில் கால்நடைகளுக்கு தேவையான இயற்கை தீவனம் கிடைத்து வருகிறது. கோடை மழையால் பால் உற்பத்தியும் படிப்படியாக உயரும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**பட்டுக்கூடு தயாரிப்பில் ஈடுபடாத விவசாயிகள் மல்பெரி நாற்று தயாரித்து அதிக லாபம் பெறலாம் பட்டு வளர்ச்சித்துறை உதவி ஆய்வாளர் தகவல்**




பட்டுக்கூடு தயாரிப்பில் ஈடுபடாத விவசாயிகளும் மல்பெரி நாற்று தயாரித்து அதிக லாபம் பெறலாம் என்று பட்டு வளர்ச்சித்துறை உதவி ஆய்வாளர்தெரிவித்துள்ளார்.

பட்டுக்கூடு

மல்பெரி சாகுபடி குறித்து பட்டு வளர்ச்சித்துறை பொள் ளாச்சி தொழில் நுட்ப சேவை மைய உதவி ஆய்வாளர் அழகு ராமலிங்கம் கூறியதாவது:- பட்டுவளர்ச்சி துறை பொள்ளாச்சி தொழில் நுட்ப சேவை பகுதியில் 1293.50 ஏக்கர் பரப்பளவில் 636 விவ சாயிகள் மல்பெரி சாகுபடி செய்து பட்டுக்கூடு தயாரித்து வருகின்றனர். இது சென்ற 2014-2015-ம் ஆண்டை விட கூடுதலாக 125 விவசாயிகள் 245 ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்துள்ளனர். வருகிற 2015- 2016-ம் ஆண்டில் மல்பெரி சாகுபடி பரப்பளவை 500 ஏக்கர் அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகளில் பட்டு வளர்ச்சித்துறை களப்பணி யாளர்கள் ஈடுபட்டு வருகின் றனர்.

தற்போது பொள்ளாச்சி பகுதியில் கோடை மழை போதிய அளவு பெய்துள்ளது. நிலமும் நனைந்து பக்குவமான ஈரப்பதத்துடன் உள்ளது. இதை பயன்படுத்தி மல்பெரி விவசாயிகள் நாற்று தயாரிக் கலாம். இந்த நாற்றை கூடுதல் தேவைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால்வெளி யிடங்களில் விலை கொடுத்து வாங்குவது தவிர்க்கப்படு கிறது.

நாற்று

மேலும் மல்பெரி சாகுபடி செய்து பட்டுக்கூடு தயாரிக் காத விவசாயிகள் தங்களிட முள்ள நிலங்களில் மல்பெரி நாற்று தயாரித்து புதிதாக பட்டு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யலாம். மல்பெரி நாற்று தயாரிக்கும் விவசாயிகள் ஒரு ஏக்கரில் சுமார் 1 லட்சத்து 25 ஆயிரம் நாற்றுக்குச்சிகள் நடலாம். இதற்கு 6 மாதங் களுக்கு மேலான மல்பெரி குச்சிகள் தகுதியானவை. பென்சில் அளவு பருமன் கொண்ட அரை அடி உயரம் கொண்ட குச்சிகளை தேர்வு செய்து கொள்ள வேண்டும்.குச்சியில் 3 கணுக்கள் இருக்க வேண்டும். இதை 2 கணுக்கள் மண்ணிற்குள் புதைந்த படி நட வேண்டும். குச்சிகளை நடுவதற்கு முன்பு விதை நேர்த்தி செய்ய வேண் டும். அதாவது 10 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பெவிஸ் டின் மருந்து கலந்து விதை குச்சிகளை 10 நிமிடம் ஊர வைக்க வேண்டும். இதனால் வேர் பூச்சி, பூஞ்சானம் தாக்கு வது தடுக்கப்படுகின்றன. மேட்டுப்பாத்தி அமைத்து நாற்று தயாரிப்பது சிறந்தாகும். ரூ.3லட்சம் லாபம் மேட்டுப்பாத்தி ½ அடி உயரத்தில் 20 அடி

நீளம், 4 அடி அகலத்தில் இருக்க வேண்டும். பாத்திகளுக்கு இடையில் 2 அடி இடைவெளி இருக்க வேண்டும். இதனால் களை எடுக்கவும், நாற்று பறிக் கவும் வசதியாக இருக்கும். 4 மாதம் கழித்து மல்பெரி நாற்று பறிக்கலாம். ஒரு ஏக்கருக்கு நடப்பட்டதில் ஒரு லட்சம் நாற்றுக்கள் தோறும். சராசரி யாக ரூ.1-க்கு விற்பனை செய் தாலே ரூ.1 லட்சத்திற்கு விற் பனை செய்யலாம். இதில் நாற்று தயாரிப்பு செலவு ரூ.25 ஆயிரம் ஆகும். மீதி ரூ.75 ஆயிரம் லாபமாக ஈட்டலாம். வருடத்தில் 4 தடவை நாற்று தயாரித்து விற்பதன் மூலம் ரூ.3 லட்சம் கிடைக்கிறது. இது வேறு எந்த சாகுபடியி லும் கிடைக்காத லாபமாகும். இந்த நாற்றுக்களை புதிதாக பட்டு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யலாம். நாற்று வளர்ப்பு செய்ய விரும்பும் விவசாயிகள் பட்டு வளர்ச்சித்துறை களப் பணியாளர்களை அணுகி னால் விதைக் குச்சிகளுக்கான ஏற்பாடுகளை செய்து தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குவார்கள். ஏப்ரல், மே, ஜூன் மாதங்கள் நாற்று தயாரிக்க ஏற்ற பருவமாகும்.விலைஅதிகரிக்கும்தற்போது புதிதாக மல்பெரி நடவு செய்யும் விவசாயிகள் ஆகஸ்டு மாதத்தில் பட்டுக் கூடு தயாரிக்க தொடங்கலாம். காய்கறிகள் சாகுபடியை ஒப்பி டும் போது பட்டுக்கூடு தயா ரிப்பது அதிக லாபகரமான தாக உள்ளது. தற்போது ஒரு கிலோ பட்டுக்கூடு ரூ.300-க்கு விற்பனை ஆகின் றன. வெயில் அதிகரிக்கும் போதுவிலைஇன்னும்அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**பொள்ளாச்சி மார்க்கெட்டில் சுங்கவரி அதிகரிப்பால் வாழை இலை வியாபாரிகள் வேறு இடத்தில் ஏலம் நடத்தினர்**



பொள்ளாச்சி மார்க்கெட்டில் வழக்கமாக வாழை இலை ஏலம் நடைபெற்ற இடம் வெறிச்சோடி கிடப்பதையும், கந்தசாமி பூங்கா அருகே உள்ள காலி இடத்தில் வாழை இலை கட்டுகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.

பொள்ளாச்சி மார்க்கெட்டில் சுங்கவரி கட்டணம் அதிகரிப்பு காரணமாக வாழை இலை வியாபாரிகள் வேறு இடத்தில் ஏலம் நடத்தினர். வாழைஇலைஏலம்பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் வியாழக்கிழமை வாழை இலை ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்துக்கு பொள்ளாச்சி, ஆனைமலை உள்பட சுற்றுப்புற பகுதிகளில் இருந்து விவசாயி கள் வாழை இலைகளை விற்பனைக்கு கொண்டு வருவார்கள். இவற்றை வியாபாரிகள்வாங்கிசெல்வார்கள்.

மார்க்கெட்டுக்குள் வாழை இலைகளை விற்பனைக்கு கொண்டு வருவதற்கு ஒரு கட் டுக்கு ரூ.3.50 என விவசாயிகளிடம் சுங்க வரி வசூலிக்கப்பட்டது. மேலும் விற்பனை செய் யப்படும் வாழை இலை கட்டுக்களை சரக்கு வாகனத்தில் கொண்டு செல்ல வாகனத்துக்கு சுமார் ரூ.30 முதல் ரூ.40 வரை கட்டணம் வசூ லிக்கப்பட்ட தாக தெரிகிறது. இடமாற்றம் இந்த நிலையில் திடீரென்று வாழை இலை களை விற்பனைக்கு கொண்டு வர ஒரு கட்டுக்கு கட்டணம் ரூ.5 நிர்ணயிக்கப்பட்டதாக கூறப் படுகிறது. மேலும் சரக்கு வாகனத்துக்கும் கட்டணத்தை ரூ.50 ஆக அதிகரித்துள்ளனர். இதனால் நேற்று விவசாயிகள் வாழை இலை களை விற்பனை செய்ய மார்க்கெட்டுக்குள் கொண்டு வர மாட்டோம் என்று தெரிவித்து விட்ட னர். இதைத்தொடர்ந்து வாழை இலை ஏலம் அங்கிருந்து இடம் மாற்றப்பட்டு, பொள்ளாச்சி தேர்நிலையம் பகுதியில் உள்ள கந்தசாமி பூங்கா அருகில் காலி இடத்தில் நேற்று ஏலம் நடைபெற்றது. இதன் காரணமாக இதுவரை ஏலம்நடைபெற்றஇடம்வெறிச்சோடிகாணப்பட்டது.இதுகுறித்து வியாபாரிஒருவர்கூறியதாவது:-

வெளியேநடந்ததுகிடையாதுபொள்ளாச்சி மார்க்கெட்டில் சுமார் 40ஆண்டு களாக வாழை இலை ஏலம் நடை பெற்று வரு கிறது. வியாழக்கிழமை நடைபெறும் ஏலத்துக்கு 300 கட்டு (ஒரு கட்டுக்கு சுமார் 100 இலைகள் இருக்கும்) வாழை இலைகளும், ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் ஏலத்துக்கு 250 கட்டு களும் விற்பனைக்கு வரும். ஒரு வாரம் கூட ஏலம் மார்க்கெட்டை விட்டு வெளியே நடந்தது கிடையாது. தற்போது விவசாயிகளிடம் வசூ லிக்கப்பட்ட சுங்கவரி கட்டணத்தை

ரூ.3.50-ல் இருந்து ரூ.5 ஆக உயர்த்தி விட்டனர். மேலும் சரக்கு வாகன கட்டணம் ரூ.30-ல் இருந்து ரூ.50 ஆக உயர்த்திவிட்டனர். இந்த திடீர் அறிவிப்பினால் அதிருப்தி அடைந்த விவசாயிகள் நேற்று மார்க்கெட்டுக் குள் வாழை இலைகளை விற்பனைக்கு கொண்டு வர மறுத்து விட்டனர். இதனால் ஏலம் தேர்நிலையம் கந்தசாமி பூங்கா அருகில் உள்ள காலி இடத்தில் நடைபெற்றது.

வாடகைபிரச்சினை

மேலும் மார்க்கெட்டில் ஒரு நாளைக்கு ரூ.200 வாடகை கேட்கிறார்கள். ஏலம் வாரத் தில் 2 நாட்கள் தான் நடைபெறுகிறது. தினமும் வாடகை கேட்பதால் நஷ்டம் தான் ஏற்படும். எனவே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண நகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறுஅவர்கூறினார்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், பல்வேறு சிரமத்துக்கு மத்தியில் விவசாயம் செய்து, வாழை இலைகளை மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டு வருகிறோம். ஆனால் இங்கே சுங்க வரி கட்டணத்தை உயர்த்தி விட்ட னர். இதனால் எங்களுக்கு நஷ்டம் தான். எனவே நாங்கள் வேறு இடத்துக்கு வாழை இலைகளை கொண்டு சென்று, அங்கு மொத்த வியாபாரிகள் மூலம் ஏலத்தில் விற்பனை செய் துள்ளோம். எனவே மார்க்கெட்டில் சுங்கவரி கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்று கூறினார்கள்.

**மயிலாடுதுறையில் வேளாண்மை கருவிகள் வாடகை மையம் அறிமுக விழா உதவி கலெக்டர் தலைமையில் நடந்தது**



மயிலாடுதுறையில் வேளாண்மை கருவிகள் வாடகை மையம் அறிமுக விழா உதவி கலெக்டர் திவ்யதர்ஷினி தலைமையில் நடந்தது.

அறிமுகவிழா

மயிலாடுதுறையில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் வேளாண்மை கருவிகள் வாடகை மையம் அறிமுக விழா நடைபெற்றது. விழாவிற்கு உதவி கலெக்டர் திவ்யதர்ஷினி தலைமை தாங் கினார். உதவி செயற் பொறியாளர் கண்ணன், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் கணேசன், உதவி இயக்குனர் வெற்றிவேல், உதவி பொறியாளர்கள் இமயவரம் பன், செந்தில்குமார், சவுந்தர்ராஜன், வரதராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் உதவி கலெக்டர் திவ்யதர்ஷினி, மயிலாடுதுறை ஒன்றியத்தில் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை வளர்ச்சி தலைவர் திருவரச மூர்த்தியிடம் வாடகை கருவிகளை ஒப்படைத்து பேசினார். அப்போதுஅவர்கூறியதாவது:-

அரசுமானியம்

வேளாண்மை பொறியியல் துறையினர் அதிக அளவில் எந்திரங்களை அறிமுகப்படுத்தி உள்ளனர். ஆனால் அந்த எந்திரங்களின் விலை அதிகமாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு விவசாயத்திற்கு பயன்படும் எந்திரங்களை, அரசு மானியம் மற்றும் வங்கி கடன் வசதி மூலம் வழங்கு கிறது. தற்போது வேளாண்மை கருவிகளின் வாடகை மையத் தையும் அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் மயிலாடுதுறை, குத்தாலம், செம்பனார் கோவில், சீர்காழி ஆகிய 4 ஒன்றியங்களுக்கும் 40 சதவீத மானியத்துடன் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் நடவு எந்திரம், டிராக்டர், ரொட்டவேட்டர், துளையிடும் கருவி, பவர் டில்லர் ஆகிய வேளாண்மை கருவிகள் வழங்கப்பட்டன.

**கீரமங்கலம் காய்கனி கமிஷன் கடையில் ஒரு பலாப்பழம் ரூ.1000–க்கு விற்பனை**



கீரமங்கலத்தில் ஒரு பலாப் பழம் ரூ.1000–க்கும் மற்றொரு பலாப் பழம் ரூ. 750–க்கும் விற்பனை ஆனது. இந்த ஆண்டில் அதிக விலைக்கு விற்ற பலாப்பழங்கள் இது தான்.

பலாப் பழங்கள்

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் பலாப்பழத்துக்கு பெயர் போனது. இந்த நிலையில் பலாப்பழம் உற்பத்தி இப்போது அதிகரித்து அறுவடை செய்யப்பட்ட பலாப்பழங்கள் கீரமங்கலம், கொத்தமங்கலம், குளமங்கலம், வடகாடு, பேப்பர்மில் சாலை, புளிச்சங்காடு கைகாட்டி ஆகிய இடங்களில் உள்ள கமிஷன் கடைகளுக்கு விற்பனைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

கமிஷன் கடைகள் மட்டுமின்றி மொத்த வியாபாரிகள் விவசாயிகளின் தோட்டங்களிலேயே மொத்தமாக வாங்கி அறுவடை செய்து மும்பை, கொல்கத்தா, சென்னை என்று பல்வேறு பெரு நகரங்களுக்கும் லாரிகளில் ஏற்றி செல்கின்றனர். ஒரு சில இடங்களில் ஒரு கிலோ ரூ. 13–க்கும் வாங்கி செல்கின்றனர்.

ரூ. 1000–க்கு விற்பனை

இந்த நிலையில் கீரமங்கலத்தில் உள்ள ஒரு காய்கனி கமிஷன் கடைக்கு செரியலூரில் இருந்து ஒரு விவசாயி 2 பெரிய பலாப்பழங்களை கொண்டு வந்தார். அந்த பழங்களை வாங்க வியாபாரிகள் போட்டி போட்டனர். இறுதியில் 50 கிலோ எடையுள்ள பெரிய பழம் ரூ. 1000–க்கும் அதைவிட சற்று சிறிய பழம் ரூ. 750–க்கும் ஏலத்தில் ஒரு வியாபாரி வாங்கினார்.

இந்த ஆண்டில் அதிக விலைக்கு விற்பனை ஆன பலாப்பழங்கள் இது தான் என்று அங்கு நின்ற வியாபாரிகளும், விவசாயிகளும் கூறினார். மேலும் இதே போல பழம் கடந்த ஆண்டுகளில் ரூ. 2 ஆயிரம் வரை ஏலம் போனது. ஆனால் இந்த ஆண்டு பாதி விலை கூட விற்பனையாகவில்லை என்றனர்.

**பெரியகுளம் பகுதியில் பெய்த மழையால் மாங்காய் விளைச்சல் அதிகரிப்பு; விவசாயிகள் மகிழ்ச்சி**



பெரியகுளம் பகுதியில் பெய்த மழையின் காரணமாக மாங்காய் விளைச்சல் அதிகரிக்கும் என்று விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>மாங்காய் விளைச்சல்</u>

தேனி மாவட்டம், பெரியகுளம் பகுதியில் உள்ள சோத்துப்பாறை, கோவில்காடு, சின்னையன்பாளையம், மணக்காடு, கடம்புடி, கருங்கல், குருத்தடி, உப்புக்காடு, சரக்காடு, அழகுப்பாறை, கும்பக்கரை, முருகமலை, மஞ்சளாறு, சலுப்பக்குளம், தொண்டகுத்தி, வாலாட்டி, செலும்பு, புதுக்குளம், ஆகிய பகுதிகளில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மாந்தோப்புகள் உள்ளன.இந்த தோப்புகளில் கல்லாமை, காசா, செந்தூரம், காதர், மல்கோவா, பங்கனபள்ளி, காளப்பாடி, நாட்டுக்காய் உள்ளிட்ட பல்வேறு ரக மாங்காய்கள் விளைச்சலாகின்றன. இங்கு விளையக்கூடிய மாங்காய்கள் வெளி மாநிலங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

விவசாயிகள் மகிழ்ச்சி

இந்த ஆண்டு மா மரங்களில் புழுக்கள் அதிக அளவில் தாக்கப்பட்டது. இதனால் பூக்கள் மிகவும் சேதமடைந்தது. மேலும் போதிய மழையும் பெய்யாததால் சரிவர மரங்களில் பூக்கவில்லை. கடந்த சில வாரங்களுக்கு முன் பெய்த மழையினால் பூக்கள் அதிக அளவு அழுகிவிட்டது. இருப்பினும் பூச்சிகளால் தாக்கப்படாத பூக்கள் பிஞ்சுகளாக மாறின.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த மழையின் காரணமாக மா பிஞ்சுகள் பருக்கத் தொடங்கியுள்ளது. இந்த மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் காற்று அடிக்காமல் மழை பெய்ததால் மரத்தில் இருந்த பிஞ்சுகள் கீழே உதிராமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து விவசாயிகளிடம் கேட்ட போது, 'தற்போது பெய்யக் கூடிய மழை மா விளைச்சலுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இன்னும் ஓரிரு வாரங்களில் மாங்காய் பறிப்பதற்கு தயாராகி விடும்' என்றனர்.

தினகரன்

**கொங்கணாபுரம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 10 ஆயிரம் மூட்டை பருத்தி .1.60 கோடிக்கு விற்பனை**

இடைப்பாடி, : இடைப்பாடி கொங்கணாபுரம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 10 ஆயிரம் மூட்டை பருத்தி ₹.1 கோடியே 60 லட்சத்திற்கு விற்பனையானது. சேலம் மாவட்டம் இடைப்பாடி அருகே கொங்கணாபுரம் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் வெள்ளி மற்றும் சனி ஆகிய இரண்டு நாட்களில் பருத்தி ஏலம் நடைபெறும். இதேபோல் நேற்று நடந்த ஏலத்திற்கு பெங்களூரு, ஒசூர், திருவண்ணாமலை, கோவை, திருச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சராசரியாக 40 கிலோ எடை கொண்ட 10 ஆயிரம் பருத்தி மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். இதில் பிடி ரகம் குவிண்டாலுக்கு (100 கிலோ) .3850 முதல் .4550 வரையும், டிசிஎச் ரகம் ₹. 4250 முதல் .4880 வரையும் விலைபோனது. மொத்தம். 1 கோடியே 60 லட்சத்திற்கு

விற்பனையானது. ஏலத்தில், வியாபாரிகள், விவசாயிகள் என 2100 பேர் கலந்து கொண்டனர். தொடர்ந்து இன்றும்(18ம் தேதி) பருத்தி ஏலம் நடக்கிறது.

**வரத்து அதிகாிப்பால் பாவூர்சத்திரத்தில் மாங்காய் விலை வீழ்ச்சி கிலோ ரூ.7 முதல் ரூ.15 வரை விற்பனை**

பாவூர்சத்திரம், : பாவூர்சத்திரம் காமராஜர் தினசரி மார்க்கெட்டுக்கு மாங்காய் வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள செங்கோட்டை, குண்டாறு, இலஞ்சி, வல்லம், காசிமேஜர்புரம், குற்றாலம் போன்ற பகுதிகள் மாந்தோப்புகள் அதிகம் உள்ளன. இங்கு உருட்டு மற்றும் ஒட்டு ரக உட்பட பல தரப்பட்ட மாங்காய்கள் அதிகம் விளைகின்றன. இங்கிருந்து மாங்காய்கள் பாவூர்சத்திரம் காமராஜர் தினசரி மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படும். பின்னர் இங்கிருந்து மாய்காய்கள் கேரளா மாநிலம் திருவனந்தபுரம், கொல்லம், பத்தினம்திட்டா, கோழிக்கோடு, ஆலப்புழா, தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சி உட்பட பலர் ஊர்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன. தற்போது விளைச்சல் அதிகரிப்பால் பாவூர்சத்திரம் மார்க்கெட்டுக்கு மாங்காய்கள் அதிகம் வரத் தொடங்கியுள்ளன. இதனால் மாங்காய் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன் ஒரு கிலோ மாங்காய் ரூ.75 முதல் 100 வரை விற்பனையானது. தற்போது ஒரு கிலோ உருட்டு மாங்காய் ரூ.7 முதல் 9 வரையும், ஒட்டு ரக மாங்காய் ரூ.12 முதல் 15 வரை விற்பனையாகிறது. இந்த விலை வீழ்ச்சியினால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மேலும் மாாக்கெட்டில் கத்திரிக்காய் 1 கிலோ ரூ.22ம், வெண்டை ரூ.23க்கும், புடலை ரூ.15க்கும், மல்லி ரூ.38 முதல் 43 வரையும், சாம்பார் வெள்ளரிக்காய் 15க்கும், எலுமிச்சை ரூ.60ம், பூசணி ரூ.3, தடியங்காய் ரூ.3 தக்காளி ரூ.7 முதல் 8 வரையும், உள்ளி ரூ.15 முதல் 16வரையும், பல்லாரி ரூ.17, முருங்கைக்காய் 12, பால்சேம்பு 25, மிளகாய் 7 முதல் 8 வரையும் விற்பனையாகிறது.